செயல்படுவதற்கும் ஒரு வழி வகுக்க வேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறது. ஆனால் உயர்நீதி மன்றத்தின் கருத்தின் அடிப்படையில் தான் அந்தத் திட்டம் உருவாக்கப்படும்.

திரு. நா. விராசாமி : தலைவரவர்களே, இந்த நடமாடும் நீதி மன்றங்கள் இருப்பதால் இப்போது குற்றவாளிகள் குறைந்து வருகிறார்கள். எனவே ஒவ்வொரு மாவட்டத்திலும் இப்படி ஒரு நடமாடும் நீதி மன்றம் உருவாக்கித் தர இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசாங்கத்தைப் பாராட்டிப் பேசியதற்கு நன்றி.

THIRU M.A. LATHEEF : Mr. Speaker, Sir, the old Tirupathur taluk in North Arcot District has been bifurcated into Vaniambadi and Tirupathur taluks. In view of the new taluk of Vaniambadi will the Hon. Minister for Law consider starting of a District Munsif Court at Vaniambadi?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : புதிய நீதிமன்றங்கள் அமைப்பதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே கனம் உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தை அந்தக் குழுவுக்கு எழுதி அனுப்புவார்களேயானால், அவர்கள் பரிந்துரை செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும்.

* 54 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Industries be pleased to state whether Mobile Courts have been set up in Madras City to try cases under Prevention of Cruelty to Animals Act?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Is the Government aware of the fact that the fines imposed by the Mobile Court are harsh and excessive and the concerned persons have to pay them at once and because of that, many of them are put to a lot of trouble?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படியெல்லாம் இல்லாமல் பார்த்துக் கொள்ளத்தான் அங்கத்தினர் போன்ற வழக்குரைஞர்கள் உதவி செய்ய வேண்டும்.

THIRU K. M. SUBRAMANIAM : Is it a fact that many poor astrologers using parrots have been prosecuted recently by the S.P.C.A. in the City of Madras and whether that has been brought to the notice of the Government?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. பட்சிகளுக்காக வாதாடிய அங்கத்தினருடைய கருத்து நீதிபதிகளுக்குத் தெரிவதும் நல்லது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.